Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 64 | சனிக்கிழமை Saturday | 03.01.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# போதையிலிருந்து இளைஞர்களை மீட்கணும்

## வைகோ நடைபயணத்தை தொடங்கி வைத்து முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு



திருச்சியில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோவின் சமத்துவ நடைபயணம் தொடக்க விழாவில், "போதையின் பாதையில் இருந்து இளைஞர்களை மீட்க வேண்டும்" என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஜாதி, மத மோதல் கூடாது, இளைஞர்கள் போதைக்கு அடிமையாவதை தடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, இன்று (ஜனவரி 02) வைகோ சமத்துவ நடை பயணத்தை தொடங்கினார். திருச்சியில் இந்த நடை பயணத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த பயணம் வரும் ஜனவரி 12ம் தேதி மதுரையில் நிறைவு பெறுகிறது.

இந்த பயணத்தின் தொடக்க விழாவில் மதிமுக நிர்வாகிகள் அழைப்பை ஏற்று, விசிக, மநீம உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர். விசிக தலைவர் திருமாவளவன், ஐ.யூ.எம்.எல். தேசிய தலைவர் காதர் மொய்தீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**காங்., புறக்கணிப்பு**

நடைபயண துவக்க விழா அழைப்பிதழின் முன் அட்டையில், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் படம் இடம் பெற்றுள்ளதை காரணம் காட்டி இந்த நிகழ்ச்சியில், காங்கிரஸ் கட்சியினர் யாரும் கலந்து கொள்ளவில்லை.

**ஓரணியில்...!**

நிகழ்ச்சியில் திருமாவளவன் பேசுகையில், "இந்த ஆண்டு நடக்கக்கூடிய தேர்தல், சமத்துவத்திற்கும் சனாதனத்திற்கும் இடையிலானது. முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஓரணியில் திரண்டுள்ளோம். திராவிடம் என்பது தமிழனுக்கு எதிரானது இல்லை, அது தமிழ் மொழியை காக்க கூடியது," என்றார்.

**வெல்க திராவிடம்**

வைகோ பேசியதாவது: இந்த ஆண்டு சட்டசபை தேர்தலில் மாபெரும் வெற்றியை, கடந்த தேர்தலைவிட விஞ்சிய வெற்றியை தனியாக திமுக ஆட்சி அமைக்கும். பெரும்பான்மை அமைந்து இருக்கும் வெற்றியை திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி பெறும். சனாதன சக்திகளால் ஜனநாயகத்துக்கு ஆபத்து,

வெல்க திராவிடம், வெல்க தமிழகம், என்றார்.

**ஆண்டின் முதல் நிகழ்ச்சி**

முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: 2026ம் ஆண்டின் முதல் நிகழ்ச்சி வைகோவின் சமத்துவ நடை பயணம் தொடக்க விழா நிகழ்ச்சி அமைந்து இருக்கிறது. இளைஞர்களுக்காகவும், எதிர்க்கால நலனுக்காகவும் பணியாற்றும் இயக்கம் திமுக. காலடி படாத இடமே இல்லாத இடம் என்ற அளவுக்கு மக்கள் பிரச்னைகளுக்கு நடை பயணம் மேற்கொண்டவர் வைகோ.

**82 வயதா? 28 வயதா?**

வைகோவின் நெஞ்சுரம், வேகத்தை பார்க்கும் போது அவருக்கு 82 வயதா? 28 வயதா? என எண்ணத் தோன்றுகிறது? போதை ஒழிப்பு, ஜாதி மத மோதல் தடுப்பு என்ற கருத்துகளோடு வைகோவின் நடை பயணம் நிச்சயம் வெற்றி பெறும்.

நடைபயணம் போது தான் மக்களிடம் சுலபமான முறையில் நேரடியாக தங்களது கருத்துகளை தெரிவிக்கமுடியும். முதுமையை முற்றிலும் தூக்கி எறிந்துவிட்டு இந்த நடை பயணத்தை வைகோ தொடங்கியுள்ளார். போதையின் பாதையில் சிக்கியவர்கள் பாதிப்பு அறிந்து விடுபட வேண்டும், உடன் இருப்பவர்கள் அவர்களை திருத்த வேண்டும்.

போதையின் பாதையில் இருந்து இளைஞர்களை மீட்க வேண்டும். போதைப்பொருள் புழக்கம் என்பது மிகப்பெரிய நெட்வொர்க். பெரும் நெட்வொர்க்கான போதையை ஒழிக்க மாநில அரசு, மத்திய அரசு இணைந்து செயல்பட வேண்டும். போதை கடத்தல் தடுக்கப்பட வேண்டும். மாநிலங்கள் விட்டு மாநிலங்களுக்கு போதைப்பொருள் கட்டுப்படுவதை மத்திய அரசு தடுக்க வேண்டும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் பொறுப்புணர்வோடு படைப்புகளை உருவாக்க வேண்டும். குழந்தைகளை பொறுப்போடு வளர்க்க பெற்றோரை கேட்டுக் கொள்கிறேன்.

நமது வீட்டு பிள்ளைகள் வழி தவறி போவதை நாம் கண்காணித்து தடுக்க வேண்டும். போதையின் பாதையில் இருந்து மாணவர்களை காக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் ஓரளவு நல்லபலன் கிடைத்துள்ளது. தமிழகத்திற்குள் போதைப்பொருட்கள் நுழைவதை தடுக்க வேண்டும். எல்லாரும் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வை பரப்ப வேண்டும்.

**வேண்டுகோள்**

மத்திய அமைச்சர் உள்ளிட்ட பதவிகளில் இருப்பவர்கள் கூட வெறுப்பு பேச்சை பேசுகின்றனர். நாட்டில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் என எல்லாரும் அச்சத்தில் வாழும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. அண்மையில் நாட்டில் பங்வேறு இடங்களில் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

அன்பு செய்ய சொல்லித்தர வேண்டிய ஆன்மிகத்தை சில கும்பல் வம்பு செய்ய சொல்லி தருகிறது. வைகோவின் நோக்கம் பெரிது என்றாலும் அதை விட அவருடைய உடல்நலம் முக்கியம். உடல்நலம் கருதி இனி வரும் காலங்களில் இது போன்ற நடை பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கிறேன். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# தமிழ்நாடு காங்கிரஸ் அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கிறது; ஜோதிமணி எம்.பி. பரபரப்பு பேச்சு



சென்னை,

காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:–

எந்த ஒரு அரசியல் கட்சியும் தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரை தேர்தல் நேரத்தில், தேர்தல் ஆணையத்திற்கு வாக்குச்சாவடி முகவர் பட்டியலை கொடுக்க விடாமல் முடக்க வேண்டும் என்று நினைக்காது. ஆனால் காங்கிரஸ் கட்சியில் அது நடக்கிறது. தமிழ்நாடு காங்கிரசில் நடைபெறும் விசயங்கள் மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது.

கொள்கை நிலைப்பாடுகளை, அரசியல் செயல்பாடுகளை நீர்த்துப் போகச் செய்ய நடக்கும் முயற்சிகள் மிகுந்த வேதனை அளிக்கிறது . தினமும் தமிழ்நாடு காங்கிரஸ், மக்கள் பிரச்சினைகள் அல்லாத தவறான காரணங்களுக்காகவே செய்திகளில் அடிபடுகிறது. தமிழ்நாடு எந்தக் காலத்திலும் இல்லாத ஒரு பேராபத்தை, மதவாத, பிரிவினைவாத, வன்முறை சக்திகளிடமிருந்து எதிர்நோக்கி உள்ளது.

எதையாவது செய்து, மக்கள் உணர்வுகளைத் தூண்டி ஆட்சி அதிகாரத்தைப்பிடித்து பெருந்தலைவர் காமராஜர், பெரியார் உள்ளிட்ட மாபெரும் தலைவர்களால் கட்டிக் காக்கப்பட்ட இம்மண்ணின் சமூக நீதி, சுயமரியாதை, மக்கள் நல அரசியல வளர்ச்சியை குழிதோண்டிப் புதைக்க ஒரு கூட்டம் காத்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சூழலில் எதிர்நோக்கியுள்ள தேர்தலை மிகக் கவனமாக கையாள வேண்டிய பொறுப்பு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உள்ளது.


ஆனால் காங்கிரஸ் கட்சி அந்த மாபெரும் பொறுப்பை சரியாக உணர்ந்துள்ளதா என்கிற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. 60 ஆண்டுகளாக ஆட்சியில் இல்லாத போதும் தொடர்ந்து காங்கிரஸ் கொடியை ஒவ்வொரு ஊரிலும் பெருமையோடு கையில் ஏந்தியிருக்கும் காங்கிரஸ் தொண்டர்களின் உணர்வுகளையும், மதவாத, பிரிவினைவாத சூழ்ச்சிக்கு அடிபணியாமல் சமூக நீதி, சுயமரியாதை, மாநில உரிமைகளுக்காகப் போராடுவதில் உறுதியோடு இருக்கும் நமது தமிழ்நாட்டு மக்களையும் நாம் கைவிட்டு விடக்கூடாது.


தமிழ்நாடு காங்கிரசில், எவ்வித கட்டுப்பாடுமற்று தொடரும் உட்கட்சிப் பிரச்சினைகள் மிகுந்த மனச்சோர்வை ஏற்படுத்துகிறது. சித்தாந்த ரீதியான அரசியலை காத்திரமாக முன்னெடுக்காமல் மக்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசாமல் வெறும் கூட்டல் கழித்தல்களை மட்டுமே செய்து கொண்டு ஒரு சிலரின் சுயநலத்திற்காக தமிழ்நாடு காங்கிரஸ் கொஞ்சம் கொஞ்சமாக அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது என்பதை உண்மையான காங்கிரஸ் தொண்டர்கள் உணர வேண்டிய நேரம் இது. தலைவர் ராகுல்காந்தியின் தன்னலமற்ற, கொள்கைப் பிடிப்பு மிகுந்த, அச்சமற்ற அரசியலுக்கு நேர் எதிரான பாதையில் தமிழ்நாடு காங்கிரஸ் சென்று கொண்டிருக்கிறது. அவரது கடின உழைப்பிற்கும், ஒப்பற்ற தியாகத்திற்கும் நாம் துரோகம் செய்ய முடியாது.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு இருக்கும் அடையாளம், மரியாதை என்பது பெருந்தலைவர் காமராசர் கட்டிக் காத்த பாரம்பரியத்திற்கும், நேரு காந்தி குடும்பத்தின் தியாகத்திற்குமான தமிழ்நாட்டு மக்களின், அன்பும், மரியாதையும் தான் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தென்காசி, குன்னூரில் கனமழை; இயல்பு வாழ்க்கை பாதிப்பு





வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் முடிவடைந்துள்ள நிலையில், தென்காசியில் மழை வெளுத்து வாங்கியுள்ளது. இதன் காரணமாக குற்றால அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டு நிலையலில், ஒரே நாளில் 20செமீட்டர் மழை பெய்துள்ளதாக வெதர்மேன் தெரிவித்துள்ளார். தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையானது அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரை நீடிக்கும். ஒரு சில நாட்களில் ஜனவரி முதல் வாரமும் மழை வெளுத்து வாங்கும். ஆனால் இந்த முறை தமிழகத்தில் எதிர்பார்த்த அளவிற்கு மழையின் தாக்கம் குறைவாக இருந்தது. குறிப்பாக தமிழகத்தை நோக்கி வரும் என எதிர்பார்க்கப்பட்ட புயல் வேறு இடத்திற்கு நகர்ந்தது. இருந்த போதும் பரவலாக தமிழகத்தில் நல்ல மழை கிடைத்தது, கடந்த டிசம்பர் 4ஆம் தேதி வரை தமிழகத்தில் மழையின் பாதிப்பு குறைய தொடங்கியது. வறண்ட வானிலையே நீடித்து வந்தது. பெரும்பாலான இடங்களில் குளிரின் தாக்கமும் அதிகரித்தது.

**தென்காசியில் கன மழை**

இந்த நிலையில் யாரும் எதிர்பார்க்காத அளவில் தென்காசி மாவட்டத்தில் மழையானது வெளுத்து வாங்கியுள்ளது. தென்காசி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்த நிலையில் மக்கள் கடும் அவதி அடைந்து வந்தனர். மேலும் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான குற்றால அருவிகளான மெயின் அருவி, ஐந்தருவி, புலியருவி, சிற்றருவி உள்ளிட்ட அருவிகளில் தினம்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குளித்து மகிழ்ந்து செல்கின்றனர். இந்த நிலையில் வளிமண்டலகீழடுக்குசுழற்சி காரணமாக நேற்று இரவு முதல் தொடர்ந்து மலைப்பகுதிகளில் பெய்து வரும் கனமழையால் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அனைத்து அருவிகளிலும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டு ள்ளது.

இதன் காரணமாக ஐயப்ப பக்தர்களும் சுற்றுலா பயணிகளும் அருவியில் குளிக்க முடியாமல் ஏமாற்றம் அடைந்ததோடு அருவிக்கரையில் இருந்து வரக்கூடிய சாரல் மழையில் நனைந்தபடி சென்றனர்

எனவே இன்றும் தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களில் மழை பெய்தாலும் நேற்றைய அளவிற்கான கனமழை இருக்காது என தெரிவித்துள்ளார். குறிப்பாக தென்காசியில் உள்ள கடனா அணையில் இன்று அதிகாலை நிலவரப்படி 202 மி.மீ. மழை பெய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். தற்போது கடனா அணையின் முழு கொள்ளளவான 335.52 அடியில், தற்போதைய கொள்ளளவு – 326.35 Mcft உள்ளதாகவும், நீர்வரத்து – 2916 கனஅடியாகவும், நீர் வெளியேற்றம் – 2277 கனஅடியாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் ஆங்கில புத்தாண்டு வாழ்த்து தெரிவித்து புத்தகம் வழங்கினார்.



சேலம், ஜாகிர் அம்மாபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் (02.01.2026) நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமினை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா. இளங்கோவன், துணை மேயர் மா.சாரதாதேவி, மாவட்ட சுகாதார அலுவலர் (சேலம்) மரு. சௌண்டம்மாள் ஆகியோர் உள்ளனர்.



கடலூர் மாவட்டம் விருத்தாசலம் ரயில்வே சந்திப்பில் வந்தே பாரத் ரயில் நின்று செல்வதற்கு பாரதிய ஜனதா கட்சியின் மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சர் எல்.முருகன் அவர்கள் உத்தரவு பெற்று தந்ததற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் வந்தே பாரத் ரயிலே

வரவேற்கும் விதமாகவும் நகர தலைவர் அருள்ஜோதி தலைமையில் மலர்த்துவி வரவேற்கப்பட்டது.

இதில் மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட செயலாளர் வெங்கடேசன், முன்னிலை வகித்தனர். நகர மண்டல பிரதிநிதி ஜெயராமன், மாநில பொதுக்குழு உறுப்பினர் ராமமூர்த்தி, ரயில்வே போர்டு ஆலோசனை குழு

உறுப்பினர் ராஜ்குமார், முன்னாள் மாவட்ட செயலாளர் செந்தில்குமார், வடக்கு மண்டல தலைவர் பரமசிவம், இளைஞர் அணி தலைவர் சரவணன், மற்றும் பாஜக நிர்வாகிகள் செல்வராஜ், நாராயணன், ஜெய் கணேஷ், செந்தில், பூவராகவன் எழிலரசன், மாலினி, மற்றும் பாஜக தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிக்கு காளைகள் மருத்துவ பரிசோதனை தகுதி அடிப்படையில் தேர்வு செய்யபட்டது



மதுரை உலக புகழ் பெற்ற அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டியில் கலந்து கொள்வதற்காக காளைகள் மருத்துவ பரிசோதனை இன்று காலை முதல் துவங்கியுள்ளது

இந்த மருத்துவ பரிசோதனையில் ஜல்லிக்கட்டு போட்டியில் கலந்து கொள்ளும் காளைகளுக்கு காளைகளுக்கு சுமார் இரண்டு வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் அதேபோன்று காளைகளின் உயரம் சுமார் 120 சென்டிமீட்டருக்கு மேல் இருக்க வேண்டும் காளைகளின் கொம்புகள் கூர்மையாக இருக்கக் கூடாது

அதேபோன்று மாட்டின் உரிமையாளர் இரண்டு பேருக்கு இந்த பகுதியில் ஆதார் எண் இந்த பகுதியில் குடியிருக்க வேண்டும் மாட்டின் உரிமையாளர் இரண்டு பேருக்கும் 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும் இந்த கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட காளைகள் ஜல்லிக்கட்டு போட்டியிடுவதற்கு தகுதி அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றது.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (2.1.2026) ஈரோடு மாவட்டம், குமாரவலசு ஊராட்சி, உருமாண்டம்பாளையத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பகுதிநேர நியாயவிலைக்கடையினை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.



# வடமதுரை விருந்தீஸ்வரர் திருக்கோயிலில் புது வருட முதல் பிரதோஷம் சுவாமி திருவீதி உலா அன்னதானம்



கோவை துடியலூர் அருகே உள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் திருக்கோவிலில் ஆங்கில புத்தாண்டில் முதல் பிரதோச விழா நடைபெற்றது. நந்திக்கு அபிசேக அலங்கார பூஜை மற்றும் மூலவருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.மேலும் கோவிலைச் சுற்றி சுவாமி திருவீதி உலா நடைபெற்றது. இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

சுமார் 1000 வருடங்களுக்கு மேல் பழமையான கோவை துடியலூர் அடுத்துள்ள வடமதுரை விருந்தீஸ்வரர் திருக்கோயிலில் ஆங்கிலப் புத்தாண்டில் முதல் நாளில் வரும் பிரதோஷ விழா விமர்சையாக நடைபெற்றது.

முதலில் பெரிய நந்திக்கும் பின்னர் சிவனுக்கு சிறப்பு அபிசேக பூஜைகள் மற்றும் அலங்கார பூஜைகள் நடைபெற்றது. இதில் நந்திக்கு பால், தயிர், இளநீர், மஞ்சள், சந்தனம், திருநீர் உள்ளிட்டவைகளால் அபிசேகங்கள் நடைபெற்றன.

பின்னர் அருள்தரும் விஸ்வநாயகி அம்பிகை உடன்அமர் அருள்மிகு விருந்தீஸ்வரர் சுவாமி திருவீதி உலா,கோவிலை சுற்றி நடைபெற்றது. இதில் இறைவனுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இந்த பூஜையில் வடமதுரை, துடியலூர், பன்னிமடை, பழனிகவுண்டன்புதூர், பூச்சியூர், தொப்பம்பட்டி, நரசிம்மநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பல ஊர்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. இந்தவிழாவிற்கு அருள்மிகு விருந்தீஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் பி.வி. மணி தலைமை வகித்தார். அறங்காவலர் குழு உறுப்பினர்கள் அம்சவேணி பழனிச்சாமி, சாமிநாதன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தயாநிதி குருக்கள் தலைமையில் சிவனடியார்கள் இறைவனுக்கு அபிசேக, அலங்கார பூஜைகளை செய்தனர். மேலும் இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை எல் எம் டபுள்யூ அசோகன், வேல்முருகன், போஸ்ட் ஆபிஸ் சண்முகம், சேகர், குமரபுரம் சண்முகம், சேது, பிரதோச குழுவினர், வெள்ளகிணர் செல்வகுமார், ரவிச்சந்திரன், தணிகைசெல்வன், மோகனசுந்தரம், விஜயகுமார், என்.பி.பாபு, விவீன், அபிசந்திரன், ஜெயபால், காளிதாஸ், அருணாச்சலம், ஆர் பி எம் கண்ணன், சுரேஷ், ஆர் விஜயன், ஜோதிமணி, கலா, ஜெயகொடி, பேபி, ஆடிட்டர் கிரண்ஸ்ரீ, லட்சுமி, தேசிக், மம்தா, ஜெயஸ்ரீ உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

அதேபோல் வருகின்ற ஜனவரி 3ம் தேதி சனிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் விருந்தீஸ்வர கோவில் வளாகத்தில் மார்களி திருவாதிரையை ஒட்டி ஆருத்ரா தரிசன பெருவிழா நடைபெருகிறது. இதில் மஹா அபிசேகம், மகா தரிசனம், திருவீதி உலா, பிரசாத விநியோகம் நடைபெறவுள்ளது.

# சேலம் அரசு மருத்துவமனையில் புத்தாண்டில் 29 குழந்தைகள் பிறந்தன



சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புத்தாண்டு தினமான (01.01.26) மாலை வரை 11 ஆண், 8 பெண் என 19 குழந்தைகள் பிறந்தன. மேலும், ஆத்தூர், மேட்டூர், ஓமலூர் உள்ளிட்ட மாவட்டத்தின் பிற அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 10 குழந்தைகள் பிறந்தன. இதன் மூலம் சேலம் மாவட்டத்தில் புத்தாண்டு தினத்தில் ஒரே நாளில் மொத்தம் 29 குழந்தைகள் பிறந்துள்ளன. குழந்தைகளும், அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களும் நலமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.


வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959


# தாராபுரத்தில் பொதுமக்கள் பயன்படுத்தும் தண்ணீர் குழாயை உடைத்து ஆராஜகம்



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் காமராஜபுரத்தில் 1 வது வார்டு பகுதியில் பள்ளிவாசலுக்கு பின்புறம் உள்ள தெருவில் ராஜா அவரது மனைவி பிரேமா மகள் பிரியா ஆகிய மூவரும் நேற்று இரவு பொதுமக்கள் பயன்படுத்தும் தண்ணீர் குழாயை உடைத்து அராஜக செயலியில் ஈடுபட்டனர் தண்ணீர் பைப்பை நம்பி பல குடும்பங்கள் வாழ்கிறது வயதானவர்கள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் அந்த குழாய் பைப்பில் தான் தண்ணீர் பிடிக்கிறார்கள் இதை எதுவுமே பொறுப்பெடுத்தாமல் ராஜா மற்றும் மனைவி பிரேமா மகள் பிரியா ஆகிய மூவரும் தொடர்ந்து அரசு சொத்துக்களை சேதப்படுத்தும் வகையில் ஈடுபட்டு வருகிறார்கள் இதை எதிர்த்து யாராவது கேள்வி கேட்டா கவுன்சிலர் எங்களுடைய உறவுக்காரர் இது நாங்க போட்ட பைப் நாங்கள் என்ன வேணாலும் செய்வோம் அதைக் கேட்க நீ யார் எனத் தகாத வார்த்தைகளால் குடும்பமே சேர்ந்து அவர்களை திட்டுவார்கள் அக்கம் பக்கத்தில் உள்ள வாடகைவீட்டில் வசிப்பவர்களை வீடு இல்லை வாசல் இல்லை என கேவலமாக பேசுவதும் போன்ற கேவலமான செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அப்பகுதி மக்கள் மீகுந்த வேதனையுடன் தெரிவிக்கின்றனர் மக்கள் பயன்படுத்தும் தண்ணீர் குழாயை உடைத்த ராஜா குடும்பத்தினரை கண்டித்து அவர்கள் உடைத்ததண்ணீர்பைப்குழாயை அவர்கள் சொந்த செலவில் செய்து கொடுக்க தாராபுரம் நகராட்சி உத்தரவிட வேண்டும் என பகுதி மக்கள் கோரிக்கை

# தொளசம்பட்டி சந்தைப் பேட்டை பஸ் நிறுத்தத்துக்கு 70 ,98 அரசு பேருந்து வராததால் பொதுமக்கள் அவதி

சேலம் மாவட்டம் தொளசம்பட்டி பேருந்து நிலையத்தில் 98 மற்றும் 70 நம்பர் கொண்ட அரசு பேருந்து சேலத்தில் இருந்து தொளசம்பட்டிக்கு வந்து செல்கின்றன இந்த பேருந்து தொளசம்பட்டி பேருந்து நிலையத்திலேயே நின்று விடுகிறது ஆனால் பொதுமக்கள் பெரும் சிரம் அடைகின்றனர்.பேருந்து நிலையத்திலிருந்து 1/2 கிலோ மீட்டர் தொலைவில் சந்தைப்பேட்டை என்ற பஸ் நிறுத்தம் உள்ளது இதில் இந்த 98,70 நம்பர் அரசு பேருந்து இந்த சந்தப்பேட்டை பஸ் நிறுத்தத்திற்கு பஸ் வருவதில்லை இதனால் பள்ளிக்குச் செல்லும் மாணவ மாணவிகள் மற்றும் அரசு வேலைக்கு செல்லும் ஊழியர்கள், கூலி வேலைக்கு செல்லும் பொதுமக்கள் இவர்களெல்லாம் தொளசம்பட்டி சுற்றுப்புறத்தில் இருந்து பஸ் பயணம் செல்ல வருகின்றனர் இவர்களால் தொளசம்பட்டி பஸ் நிலையத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்குள் செல்ல இயலவில்லை ஆனால் இந்த குறிப்பிட்ட நம்பர் பஸ் அரசு பேருந்து தொளசம்பட்டி சந்தப்பேட்டை பஸ் நிறுத்தம் பகுதிக்கு இந்த அரசு பேருந்து வந்தால் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் கூலி வேலைக்குச் செல்லும் மக்கள், அரசு ஊழியர்கள் பேருந்தில் பயணம் செய்து தங்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு அவர்கள் செல்வதற்கு மிகவும் ஏதுவாக இருக்கும் ஆனால் இந்த மேலே குறிப்பிட்டுள்ள நம்பர் கொண்ட அரசு பேருந்து இரண்டு வருடங்களுக்கு முன்பு சந்தைப்பேட்டைக்கு வந்து கொண்டிருந்தது தற்பொழுது தான் அந்த சந்தப்பேட்டை பஸ் நிலைய பஸ் ஸ்டாப்புக்கு பஸ் வருவதில்லை என்பது மக்கள் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றனர். மேலே குறிப்பிட்டுள்ள 70,98 அரசு பேருந்து தொளசம்பட்டி சந்தை பஸ் ஸ்டாப்புக்கு பஸ் வந்தால் மக்களுக்கு மிகவும் ஏதுவாக இருக்கும் என்று ஊர் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் (02.01.2026) மதுரை மாவட்டம்,திருமங்கலம் நகராட்சி திருமங்கலம் மற்றும் கள்ளிக்குடி இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே கடவு எண் 377இன் குறுக்கே மேம்பாலம் அமைக்கப்பட்டுவரும் பணியினை ஆய்வு செய்து பார்வையிட்டார். பணிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# ஏற்காடு எக்ஸ்பிரஸ் நேர மாற்றம்: ஈரோடு எம்.பி. மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் பயணிகளுக்கு இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

ஈரோடு – சென்னை இடையே இயக்கப்படும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலின் புறப்படும் நேரம் மாற்றப்பட்டதை முன்னிட்டு, ஈரோடு இரயில் நிலையத்தில் பயணிகளுக்கு இனிப்பு வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

கடந்த பல ஆண்டுகளாகவே, பயணிகளின் வசதிக்காக ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலின் புறப்படும் நேரத்தை மாற்ற வேண்டும் என்று ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், காங்கிரஸ் கட்சி, பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் வர்த்தக சங்கங்கள் சார்பில் மத்திய இரயில்வே அமைச்சகத்திற்குத் தொடர் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன.

இந்தக் கோரிக்கையை ஏற்று, ஜனவரி 1–ஆம் தேதி முதல் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் ஈரோட்டில் இருந்து இரவு 9:00 மணிக்கு பதிலாக, இரவு 9:45 மணிக்கு புறப்படும் என இரயில்வே நிர்வாகம் அறிவித்தது. இந்த புதிய நேர மாற்றத்தின்படி ரயில் புறப்பட்டபோது, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மற்றும் காங்கிரஸ் ஈரோடு மாநகர் மாவட்டத் தலைவர் திருச்செல்வம் ஆகியோர் பயணிகளுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், ஈரோடு



தெற்கு மாவட்ட திமுக பொருளாளர் ப.க.பழனிச்சாமி, பெரியார் நகர் பகுதி செயலாளர் அக்னி சந்துரு, காங்கிரஸ் நிர்வாகிகள் கே. என்.பாட்ஷா, அர்ஷத் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# புதுப்பிக்கப்பட்ட 200 வருட பழமையான வல்லம் சாகுல் ஹமீது ஆண்டவர் ஜும்மா பள்ளிவாசல் திறப்பு விழா!





தென்காசி மாவட்டம் செங்கோட்டை அடுத்துள்ள வல்லம் கிராமம் இயற்கை எழில் சூழ்ந்த பொதிகை மலை அடிவாரத்தில் அமைந்த சிறிய கிராமம் ஆகும். இங்கு பிரதான தொழிலாக அரிய வகை பழங்கள் மொத்த விற்பனை செய்யும் தொழிற்கூடமாக செயல்பட்டு வருகிறது.

இங்கு வாழும் இஸ்லாமியர்கள் கடந்த 200 வருடங்களுக்கு முன்பாக தொழுகை பள்ளியை அமைத்து இறை வழிபாடு செய்து வந்தனர் பழமையான பள்ளி என்பதாலும் தற்போதைய மக்கள் தொகை வளர்ச்சியின் அடிப்படையில் இஸ்லாமியர்கள் தொழுகை நடத்துவதற்கு போதிய இட வசதி இல்லாத சூழ்நிலையில் விஸ்திகரிக்கும் பணியானது கடந்த ஆறு மாத காலமாக நடைபெற்று வந்தது. இந்நிலையில் நிலையில் புதிய கட்டிடத்தின் கட்டுமான பணி முடிந்து புதுப்பிக்கப்பட்ட சாகுல் ஹமீது ஆண்டவர் ஜும்மா பள்ளிவாசல் தொழுகைக்காக திறந்து வைக்கப்பட்டது. மிகவும் பழமை வாய்ந்த பள்ளிவாசல் என்பதாலும் ஏராளமான பொதுமக்கள் ஒன்று கூடி சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சிக்கு ஹாஜி எம். கே. அகமது மீரான் தலைமை தாங்கினார் நாகூர் மைதீன் என்ற ராஜ் ஜாபர் அலி முகைதீன் அப்துல் காதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தென்காசி மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் வல்லம் திவான் ஒலி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியினை ஜமாத்துல் உலாமா பொறுப்பாளர் கமருதீன் ஆலிம் பாகவி தொகுத்து வழங்கினார். பள்ளிவாசலின் முதல் கட்டிடத்தை எம். கே.கே. அகமது மீரான் மற்றும் இரண்டாவது கட்டிடத்தை தென்காசி யூனியன் சேர்மன் ஷேக் அப்துல்லா ஆகியோர் திறந்து வைத்தனர். பள்ளியின் இமாம் சையத் அலி சிறப்பு துவா ஓதினார். பின்னர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. நாகூர் மைதீன் என்ற ராஜ் நன்றியுரை கூற விழா சிறப்பாக முடிவற்றது இந்நிகழ்ச்சியில் காதர் அண்ணாவி (எ) செய்யது ,ஆசிரியர் முகமது இஸ்மாயில், சாகுல் ஹமீது, திவான் ஒலி, செய்யது சுலைமான் என்ற சீமான், கனி பீர்முகமது, ஊராட்சி மன்றஉறுப்பினர்திவான் ஒலி, நசீர், அகமது, ஜாஹிர், ஹக்கீம், ஷேக் மைதீன், எஸ் எஸ் ஃப்ரூட் பீர்முகமது, ஹலிபா , ஹபிபுல்லா உட்பட ஏராளமான பொதுமக்களும் பள்ளிவாசல் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

# ஊத்தங்கரை அருகே கந்துவட்டி கொடுமையால் விவசாயி விஷம் குடித்து சாவு





கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த கொட்டாரபட்டி கிராமத்தில் கந்துவட்டி கொடுமையால் விவசாயி வேலுமணி (வயது 53) என்பவர் விஷம் குடித்து சிகிச்சை பலனின்றி பலியானார்.

ஊத்தங்கரை அடுத்த மண்ணாடிபட்டி கிராமத்தைச் சேர்ந்த தமிழ்மணி என்ற பைனான்சியர் கந்துவட்டிக்காக கொட்டாரப்பட்டி கிராமத்தை சேர்ந்த முருகன் மகன் வேலுமணி என்பவருக்கு ரூபாய் 50,000 கொடுத்துள்ளார். 10 மாத தவனையில் 9 மாத தவனை செலுத்திய நிலையில் கடைசி ஒரு மாத தவணை செலுத்து முடியாமல்'அவதிப்பட்டு வந்த நிலையில் , கடந்த 25ம்'தேதி மதியம் வீட்டிற்கு வந்த தமிழ்வாணன் மற்றும் அவரது அடியாள் தனபால் (58) ஆகிய இருவரும் வேலுமணி கழுத்தில் துண்டைபோட்டுசினிமா காட்சி போல் இழுத்து சென்று கிராமத்தின் மையப்பகுதிக்கு சென்று சரமாறியாக தாக்கியுள்ளனர். பின்னர் அங்கு வந்த வேலுமணியின் மனைவி அம்பிகா (47) அவர்களிடம் அழுது விரைந்து பணத்தை தருவதாக ஒப்புக்கொண்டதையடுத்து இருவரும் சென்றுள்ளனர்.

இதனால் மனமுடைந்த வேலுமணி அன்று மாலை அனுமன்தீர்த்தம் சென்று பூச்சி மருந்து வாங்கி குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து அவரது மனைவி மற்றும் மக்களிடம் இனி என்னால் உங்களுக்கு தொந்தரவு இருக்காது என அழுது கூறியுள்ளார். இதனால் சந்தேகமடைந்தமனைவி அவரை உடனடியாக ஊத்தங்கரைஅரசுபொது மருத்துவமனைக்கு அழைத்து சென்று சோதித்ததில் அவர் விஷம் அருந்தியது தெரிய வந்தது. இதையடுத்து மேல்'சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கர்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று பிறகு கிருஷ்ணகிரியல் உள்ள தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவுல் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று 30.12.2025 சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

கந்துவட்டி கொடுமையால் தமிழ்மணி உயிரிழந்த சம்பவம் கிராமத்தில் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது. ஊத்தங்கரை காவல் நிலையத்தில் கடந்த 25ம் தேதி கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் தமிழ்வாணன் மற்றும் தனபால் ஆகிய இருவர் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்ய கோரி'கை எழுந்துள்ளது.

## ஊத்தங்கரை அருகே பரபரப்பு

# தேசிய நெடுஞ்சாலையில் தனியார் ஷூ கம்பெனி பேருந்தில் இரண்டு சக்கர வாகனம் மோதி மோட்டார் சைக்கிள் மற்றும் பேருந்து தீயில் கருகியது

## 23 தொழிலாளர்கள் உயிர் தப்பினர்





கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே உள்ளகொட்டுகாரம்பட்டி பகுதியில் இருந்து போச்சம்பள்ளி சிப்காட்டில் உள்ள தனியார் ஷூ கம்பெனிக்கு ஆட்களை ஏற்றிக்கொண்டு காலை 6.50 மணிக்கு கொட்டு காரம்பட்டியில் இருந்து கிளம்பியது. இந்தப் பேருந்தை கல்லாவியைச் சேர்ந்த மாதேஸ்வரன் வயது 51 என்பவர் ஓட்டி வந்தார். இந்த பேருந்து அடுத்த பாயிண்ட்டில் மிட்டப்பள்ளியில் இருந்து தனியார் கம்பெனிக்கு செல்லும் ஊழியர்களை ஏற்றுக்கொண்டு ஊத்தங்கரை நாட்டாண் கொட்டாய் தேசிய நெடுஞ்சாலையில் வரும்போது திருவண்ணாமலையிலிருந்து பெங்களூரு நோக்கி சென்ற கார் தனியார் கம்பெனி பேருந்தை முந்த முயன்றது. அப்போது எதிரே வந்த இரண்டு சக்கர வாகனத்தின் மீது மோதி இரண்டு சக்கர வாகனம் தனியார் கம்பெனி பேருந்தில் மோதியதில் இரண்டு சக்கர வாகனம் தீப்பிடித்தது . இந்த தீ தனியார் கம்பெனி பேருந்து பேருந்தில் பரவியுடன் தனியார் கம்பெனி ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து தீப்பிடிக்க தொடங்கியது மள மள என தீ பற்றிய உடன் பயணித்த தொழிலாளர்கள் அனைவரும் உடனடியாக பஸ்ஸிலிருந்து குதித்து உயிர் தப்பினர் . இரண்டு சக்கர வாகனம் மற்றும் தனியார் கம்பெனிக்கு ஆட்களை ஏற்றி சென்ற பேருந்து முழுவதுமாக எரிந்து நாசமானது. தகவல் அறிந்ததும் ஊத்தங்கரை தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பேருந்தின் தீயை அணைத்தனர். இதனால் தேசிய நெடுஞ்சாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நெடுஞ்சாலையில் வழியாக வரும் வாகனங்கள் மாற்றுப்பாதைகள் திருப்பப்பட்டது. சம்பவ இடத்திற்கு ஊத்தங்கரை போலீசார் விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். அதிகாலை பேருந்து தீ பிடித்து எரிந்த சம்பவம் இந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# அச்சிறுப்பாக்கம் ஆட்சீஸ்வரர் திருக்கோவிலில் பிரதோஷ விழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அருகே அச்சிறுப்பாக்கம்புகழ்பெற்ற இளங்கிளியம்மன் உடனுறை ஆட்சீஸ்வரர் திருக்கோவிலில் மார்கழி மாத பிரதோஷ விழாவெகுவிமர்சையாக நடைபெற்றது. இவ்விழாவில் நந்தி பெருமானுக்கு பால், தேன், பன்னீர், சந்தனம், இளநீர், உள்ளிட்ட 16வகையான

அபிஷேக பொருட்களை கொண்டு அபிஷேகம் அலங்காரம் செய்து மூத்த அர்ச்சகர் சங்கர் சிவாச்சாரியார் தலைமையில் பக்தர்களுக்கு தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நந்தியம் பெருமான் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி கோயில் உட்பிரகாரத்தில் மூன்று முறைவலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இதில் உள்ளூர் மற்றும் வெளியூர்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# கொல்லம், மதுரை தேசிய நெடுஞ்சாலையில் பொதுமக்கள் பஸ் மறியல்



கொல்லம் – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் அதிகாலை ஒரு மணி நேரமாக பொதுமக்கள் பஸ் மறியல் என்னசெய்யப்போகிறது மாவட்ட நிர்வாகம்? மக்களை பாதுகாக்குமா அல்லது தனியார் கல்லூரி நிர்வாகத்திற்கு காவடி தூக்குமா?தென்காசிஜனவரி 3 நேற்று முன்தினம் தென்காசி மற்றும் அதன் சுற்றுவட்டாரபகுதிகளில் கனமழை பெய்தது தொடர்ந்து 5 மணி நேரம் பெய்த கனமழையால் தென்காசி கொல்லம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வாசுதேவநல்லூர் அருகே உள்ள

மேலப்புதூர் என்னும் இடத்தில்தனியார் கல்லூரி நிர்வாகம் வாகனங்கள் செல்வதற்காக ஓடையை ஆக்கிரமித்து கட்டியதால் மழை நீர் ஊருக்குள் புகுந்தது இரவு நேரத்தில் பெய்த கனமழையால் நீர் தெருக்களில் வீடுகளுக்கும் புகுந்ததால் அதிகாலையில் பொதுமக்கள் கொல்லம்மதுரைதேசிய நெடுஞ்சாலையில் ஓடையில்ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி திடீரென பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் இது குறித்து தகவல் அறிந்த காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கவனத்திற்கு கொண்டு செல்வதாக உறுதி அளித்தனர் இது பற்றிய விவரமாவது தென்காசி மாவட்டம் சிவகிரி தாலுகா வாசுதேவநல்லூர் நாரணாபுரம் பாகம் 2 கிராமத்தில் மறுகால் ஓடை புல எண் 582 ஐ ஆக்கிரமித்து

தாருகாபுரத்தைசேர்ந்தசமூக ஆர்வலர் மணிகண்டன் என்பவர் மதுரை உயர்நீதிமன்றத்தில் ஆக்கிரமிப்பு ஓடையை அகற்றுவதற்காக வழக்கு தொடர்ந்துள்ளார் வழக்கு எண் WPMD 23216/2021 ஆகும் அந்த வழக்கானது தற்பொழுது நிலுவையில் இருந்து வருகிறது இப்படி இருக்கும் பட்சத்தில் வாசுதேவநல்லூர் தேவேந்திர குல சமூக மக்கள் குடியிருந்து வரும் பகுதியில் வீடுமற்றும் தெருவுக்குள் தண்ணீர் சூழ்ந்து கொண்டது இந்நிலையில் தங்கப்பழம் பாலிடெக்னிக்கு பாதைவசதி இல்லாததால் பொதுமக்கள் குடியிருக்கும் பாதை வழியாக கல்லூரி வாகனங்கள் சென்று வரும் சர்வே நம்பர் 582 மறுகால் ஓடையை ஆக்கிரமிப்பு செய்ததால் தண்ணீர் செல்வதற்கு வழிவகை இல்லாததால்

பொதுமக்கள் குடியிருக்கும் தெருவிலுள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது இதனால் மக்களுடைய வாழ்வாதாரமும்வீடுகளும் இடியும் தருவாயில் உள்ளது: தங்கப்பழம் என்ற தனிமனிதர் பண பலம் மற்றும் அரசியல் செல்வாக்கினால் பொதுமக்கள் பயன் படுத்தும் பாதைகள் அரசு புறம் போக்கு நிலம் அறநிலையத்துறைக்கு சொந்தமான கோவில் சொத்துக்களை பயன் படுத்தி வருகிறார் மாவட்ட நிர்வாகம் இந்த பிரச்சனையை உடனடியாக கவனத்தில் கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுமக்கள் வெள்ள நீர் மற்றும் இயற்கை பேரிடர்கள் இருந்து காப்பாற்ற வேண்டும் இல்லாத பட்சத்தில் எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் இப்பகுதி மக்கள் ஒட்டுமொத்தமாக தேர்தல் புறக்கணிப்போம் அல்லது எந்த வேட்பாளரையும் ஊருக்குள் அனுமதிக்க மாட்டார்கள் என இன்று பஸ் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர் ஆகையால் தமிழக அரசே உடனடியாக தங்கப்பழம் என்பவர் ஆக்கிரம் செய்துள்ள ஓடையை அகற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தனர் அதிகாலை நடைபெற்ற பஸ் மறியல் போராட்டத்தால் இன்று விடுமுறை முடிந்து வேலைகளுக்கு செல்லும் பலர் பாதிப்படைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

# ஏற்காடு எக்ஸ்பிரஸ் நேர மாற்றம்: ஈரோடு ரெயில் நிலையத்தில் இனிப்பு வழங்கி உற்சாகக் கொண்டாட்டம்





ஈரோடு மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று, சென்னையிலிருந்து ஈரோடு வழியாக செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலின் புறப்படும் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. *01.01.2026* அன்று முதல் இந்த ரயில் இரவு *9:00* மணிக்கு பதிலாக *9:45* மணிக்கு புறப்படத் தொடங்கியது.

இந்த ரயிலை இரவு *10:00* மணிக்கு மாற்ற வேண்டும்என்று ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை சார்பில் தொடர்ந்து கோரிக்கை, தர்ணா மற்றும் ஆர்ப்பாட்டம் மூலமாக வலியுறுத்தப்பட்டு வந்தது.

இதனைத் தொடர்ந்து, இந்தியா கூட்டணியின் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர்கே.இ.பிரகாஷ் (திமுக)அவர்கள்ரயில்வே அமைச்சரிடம் முறையாக மனு அளித்து, முதற்கட்டமாக இந்த நேர மாற்றத்தைப் பெற்றுத் தந்துள்ளார். இந்த வெற்றியைச் சிறப்பிக்கும் வகையில், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் இன்று ரயில் நிலையத்தில் சிறப்பு நிகழ்வு நடைபெற்றது.

ஈரோடு மாநகர் மாவட்டத் தலைவர் டி. திருச்செல்வம் தலைமையில், கொடுமுடி அருகே உள்ள கருமாண்டம்பாளையத்தைச் சேர்ந்த சரஸ்வதி என்ற பெண்ணுக்கு காங்கிரஸ் கட்சி சார்பில் சென்னைக்கான ரயில் டிக்கெட் எடுத்துக் கொடுக்கப்பட்டு, அவர் முறைப்படி வழி அனுப்பி வைக்கப்பட்டார்.

ரயிலில் பயணித்த அனைத்து பயணிகளுக்கும் ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத்தலைவர் கே.என். பாஷா இனிப்புகளை வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே.இ. பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், திமுக மண்டலத் தலைவர் பி.கே. பழனிசாமி, பகுதி தலைவர் அக்னி சந்துரு மற்றும் ஏராளமான திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மேலும், ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் முக்கிய நிர்வாகிகள் பலரும் இதில் திரளாகக் கலந்து கொண்டனர்:

மண்டலத் தலைவர்கள்: மாமரத்துபாளையம் எஸ். கோபி, எச்.எம். ஜாபர் சாதிக்,மாவட்ட துணைத் தலைவர் : புனிதன்,மாவட்ட பொதுச் செயலாளர்கள்: டி. கண்ணப்பன்,கதிர்வேல்,வி.கே. சச்சிதானந்தம், ஏ.சி. சாகுல் ஹமீது, இரா. கனகராஜன்,ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர்: ம. முகமது அர்சத்,தமிழ்நாடு காங்கிரஸ் வழக்கறிஞர் மாநிலத் துணைத் தலைவர்: சி.எம். ராஜேந்திரன்,தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர்: ஆரிப் அலி,சேவா தளம் மாவட்ட துணைத் தலைவர்: பி. குமரேசன்,ஈரோடு கிழக்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர்: பிரசன்னா, பத்ரி, நவீன், டீக்கடை லோகு உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# ஏற்காடு எக்ஸ்பிரஸ் நேர மாற்றம்: பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்து ஈரோட்டில் பாஜகவினர் உற்சாகக் கொண்டாட்டம்



ஈரோடு - சென்னை இடையேயான ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் நேர மாற்றத்தை பா.ஜ.க-வின் தொடர் வலியுறுத்தலே சாத்தியமாக்கியதாகக் கூறி, பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு ஈரோட்டில் நடைபெற்றது.

பயணிகளின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த இந்த ரயில் நேர மாற்றத்தை, பாஜகவினர் மத்திய அரசின் கவனத்திற்குக்கொண்டுசென்று தீவிரமாக வலியுறுத்தி வந்தனர். இதன் பயனாக, ரயில்வே நிர்வாகம் வண்டி எண்: *22650* ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலின் நேரம் இரவு 9 மணியிலிருந்து *9:45* மணிக்கு நேரத்தை மாற்றி அமைத்தது. இம்மாற்றத்தின்படி, புதிய நேர அட்டவணைப்படி ரயில் சேவை *1.1.2026* அன்று முதல் அமலுக்கு வந்துள்ளது. இந்த வெற்றியை முன்னிட்டு, மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.சரஸ்வதி தலைமையில், ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் எஸ். எம்.செந்தில் உள்ளிட்ட ஏராளமான பாஜக நிர்வாகிகள் திரண்டு கோஷங்களை எழுப்பி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். பயணிகளின் நலன் கருதி ரயில் நேரத்தை மாற்றியமைத்த பிரதமர் மோடி மற்றும் ரயில்வே அமைச்சகத்திற்கு இந்த நிகழ்வின் மூலம் அவர்கள் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். திமுகவினர் ஏராளமானோர்திரண்டு ரயிலை கொடி அசைத்து துவக்கி வைத்ததற்கு தங்களது எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

# ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் நேர மாற்றம் பிரகாஷ் எம்.பி. கொடியசைத்து தொடங்கி வைத்தார்



ஈரோடு மாவட்ட மக்களின் நீண்டகாலகோரிக்கையை ஏற்று, ஈரோடு - சென்னை சென்ட்ரல் இடையே இயக்கப்படும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் *(22650)* ரயிலின் பயண நேரம் (ஜனவரி *1, 2026*) அன்று முதல் அதிரடியாக மாற்றப்பட்டுள்ளது. இந்த புதிய ரயில் நேர சேவையை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் இன்று ஈரோடு ரயில் நிலையத்தில் கொடியசைத்து முறைப்படி தொடங்கி வைத்தார். ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் இதுவரை ஈரோட்டில் இருந்து இரவு *9:00* மணிக்குபுறப்பட்டு,அதிகாலை *3:40* மணிக்கே சென்னை சென்றடைந்து வந்தது. இந்த அதிகாலை நேரவருகையால்பொதுமக்கள்,குறிப்பாகபெண்கள், நோயாளிகள் மற்றும் முதியவர்கள் தங்குமிடம் செல்வதற்கும், நகருக்குள் செல்வதற்கான பேருந்து வசதிகளைப் பெறுவதற்கும் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வந்தனர். இப்பிரச்சினையைத் தீர்க்க ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ .பிரகாஷ் , மத்திய ரயில்வே அமைச்சரை நேரில் சந்தித்து தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அதன் பயனாக, தற்போது ரயிலின் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. *01-01-26* முதல் அமலுக்கு வந்துள்ள புதிய கால அட்டவணையின்படி, இந்த ரயில் ஈரோட்டில் இருந்து இரவு *9:00* மணிக்கு பதிலாக இரவு *9:45*மணிக்குப்புறப்படும். இதன் மூலம் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அதிகாலை *3:40* மணிக்கு பதிலாக *4:25* மணிக்குச் சென்றடையும். இந்த *45* நிமிட கால மாற்றம் பயணிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும். புதிய நேரத்தின்படி சேலத்திற்கு இரவு *10:42* மணிக்கும், ஜோலார்பேட்டைக்கு நள்ளிரவு *12:53* மணிக்கும், காட்பாடிக்கு அதிகாலை *2:03* மணிக்கும் ரயில் சென்றடையும். இந்நிகழ்ச்சியில் பேசிய கே.இ.பிரகாஷ் நாடாளுமன்ற உறுப்பினர்,"மக்களின் வசதிக்காக முதற்கட்டமாக இந்த நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளது.மேலும்ஈரோடு மாவட்டத்தின் மற்ற ரயில்வே மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடிக்கவும் தொடர்ந்து பாடுபடுவேன்" எனத் தெரிவித்தார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (2.1.2026) ஈரோடு காந்திஜி சாலை, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், 98 ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக உதவி வாக்காளர் பதிவு அலுவலர் மேற்கொண்டு வரும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (2.1.2026) ஈரோடு மாவட்டம், கனகபுரம் ஊராட்சி, ஜீவாநகர், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின்கீழ் புதிய முழுநேர நியாயவிலைக்கடையினை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு கிழக்கு) வி.சி.சந்திரகுமார், (மொடக்குறிச்சி) மரு.சி.சரஸ்வதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (2.1.2026) 99 ஈரோடு மேற்கு சட்டமன்றதொகுதிக்குட்பட்டபகுதியில்நடைபெற்றுவரும்வாக்காளர்பட்டியல்சிறப்புதீவிரதிருத்தம்2026தொடர்பான பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (2.1.2026) ஈரோடு மாவட்டம், புங்கம்பாடி ஊராட்சி, பாரவலசு பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பகுதிநேர நியாயவிலைக்கடையினை திறந்துவைத்து,குடும்பஅட்டைதாரர்களுக்குஅத்தியாவசியபொருட்களைவழங்கினார்.உடன்மாவட்டஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ப. கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி நேற்று (2.1.2026) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சாலை, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், வேளாண் விளைபொருள் விற்பனை மையக் கட்டிடத்தினை திறந்து வைத்து, மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கடனுதவியினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா உட்பட பலர் உள்ளனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.